Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸ்ரீ புரட்டாதி மீ 29 உ திங்கட்கிழமை (15 - 10 - 1990) ஹிஜ்ரி 1411 ரபி. அப். 25 ஓசை 230

## பொதுசனஉதவிப் பணம் முல்லைக்கு வந்தது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொதுசன உதவிப்பணம் வழங்குவதற்குத் தேவையான நான்கு லட்சத்து நாற்பதினாயிரம் ரூபா முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்கு வந்துசேர்ந்துள்ளது.

யூலை, ஆகஸ்ட் மாதங்களுக்குரிய பொதுசன உதவிப்பணம் இதுவரை வழங்கப்படாமையினால் இவற்றைப்பெறும் (6 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்கிளாய் - முகத்துவாரத்தில்

# புலிகளின் தாக்குதல்; 4 இராணுவம் பலி

## ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

(மணலாறு)

கொக்கிளாய் – முகத்துவாரம் இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை தண்ணீர் எடுக்கச் சென்ற இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் வழிமறித்துத் தாக்கியதில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்து பல ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

அதேவேளை இராணுவத்திற்கு உதவியாக முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினரின் வாகனம் ஒன்றும் முகாமிற்கு அருகில் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கிச் சேதமடைந்தது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: நேற்றுக்காலை ஒன்பதேகால் மணியளவில் கொக்கிளாய் முகத்துவாரம் இராணுவ முகாமில்இருந்து தண்ணீர் பெறுவதற்காகமுகாமில் இருந்து ஒரு மைலுக்கு (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி சூடு இருவர் காயம்

(மண்டைதீவு)

மண்டைதீவுச் சந்தியில் நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் ஹெலிகொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. இதில் இரண்டு பொதுமக்கள் காயமுற்றனர். இவர்களில் ஒருவர் முஸ்லிம் சமூகத்தைச் சார்ந்தவராவார்.

## பாதுகாக்கும் என எண்ணிய இந்தியா போர் தொடுத்தது

-மோகன்

(கொக்குவில்)

இந்தியா எம் மக்களைப் பாதுகாக்கும் என்றே நாம் நம்பினோம். எமது ஆயுதங்களை ஒப்படைத்தோம் எமது மக்களும் அதை நம்பினர் இந்திய இராணுவம் எமக்கு எதிராகப் போர் தொடுத்தது. இப்போரில் பல ஆயிரக்கணக்கான பொதுமக்களும் போராளிகளும் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு கொக்குவில் பிரம்படியில் இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 53 பொதுமக்களின் நினைவாக இடம்பெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் நல்லூர்ப் பிரதேசப் பொறுப்பாளர் மோகன் கலந்துகொண்டு பேசுகையில் கூறி (6ஆம் பக்கம் பார்க்க)

## வாய்த்தகராறுகிற்றாரினால் மண்டையை உடைத்தது!

(தெல்லிப்பளை)

அகதிமுகாமில் இருந்தவர் அயல் வீட்டாருடன் தகராறு கொண்டதனால் கிற்றாறினால் தாக்கி மண்டை உடைக்கப்பட்டார்.

மயிலிட்டிப் பகுதியிலிருந்து பலாலிஇராணுவமுகாம்ஷெல் தாக்குதல் காரணமாக தமது வீட்டைவிட்டுஇடம்பெயர்ந்து மல்லாகம் பகுதியில் அகதி முகாம் ஒன்றில் தஞ்சமடைந்திருந்தநாகலிங்கம்தம்பிராஜா என்ற 44 வயது நபர் தமது முகாமின் அருகே இருந்த வீட்டுக்காரருடன்தொடர்ச்சியாக பல நாட்கள் வாய்த்தகராறு கொண்டிருந்தார்.

நேற்றுக்காலை இந்தத் தக (6ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையிலிருந்து பரவலான ஷெல் தாக்குதல்

(புங்குடுதீவு)

ஊர்காவற்றுறையில் நிலைகொண்டிருக்கும் ஸ்ரீ லங்கா இராணுவத்தினரால் தினமும் தீவுப்பகுதியின் அனைத்து திசைகளையும் நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் பிரஸ்தாப முகாமிற்கு அடிக்கடி வந்து போகும் ஹெலியில் இருந்து குடிமனைகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப் படுகின்றது. இதே வேளை தீவுப்பகுதிக் கடலில் தரித்து நிற்கும் பாரிய கடற்படைக் கப்பல்களில் இருந்து பீரங்கித் தாக்குதலும் அவ்வப் (6ஆம் பக்கம் பார்க்க)

## சந்தை மீதும் பாடசாலை மீதும் விமானங்கள் நேற்று குண்டுவீச்சு

### இருவர் பலி; பலர் காயம்; கட்டடங்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா குண்டுவீச்சுவிமானங்களின் குண்டு வீச்சில் அரியாலையில் ஒரு பாடசாலையும் திருநெல்வேலி பொது சந்தையும் பலத்த சேதமடைந்தன திருநெல்வேலியில் நடந்த குண்டு வீச்சில்இரண்டு அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமாலை இரண்டு மணியளவில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் மாறிமாறிகுண்டுகளை வீசின. இதனால் திருநெல்வேலி பொதுச்சந்தை பலத்த சேதமடைந்தது இந்த குண்டு வீச்சில் பொருள் பண்டம் வாங்கச் சென்ற பொதுமக்களில் எஸ். ராஜேஸ்வரி என்ற 31 வயது பெண்மணி ஸ்தலத்திலேயேஉயிரிழந்தார். சைமன்சிங் என்ற 65 வயது உடைய முந்திரிகைப் பழ வியாபாரி ஒருவரும் கடுமையான காயங்களுக்குள்ளாகிய நிலையில் மானிப்பாய் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு பின் உயிரிழந்தார் மேலும் திருமதிநாகரத்தினம்(திருநெல் (6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் முன்பாகப் பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

தமிழ்மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் தனது ஐந்து அம்சக்கோரிக்கைகளில் ஒன்றான இராணுவ நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத்தி இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் ஐக்கிய நாடுகள் சபை அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் யாழ். கிளைமுன்பாகப் பொதுக்கூட்டம் ஒன்றுநடத்த முடிவுசெய்துள்ளது பாதிக்கப்பட்ட சகலரும் இதில் கலந்துகொண்டு இம்மன்றத்தின் ஐந்து லட்சம் தமிழ் மக்களின் கையெழுத்துத் திட்டத்திற்கு ஆதரவு தரும்படி அழைப்பு விடுக்கின்றது. இப்பொதுக்கூட்டம் முடிவில் இடம்பெயர்ந்தோர் ஆசிரியர் சங்கமும் தமிழ் மாநில அகதி (6 ஆம் பக்கம் பார்க்க)

### உடுப்பிட்டியில்

## நேற்று விமானத் தாக்குதல்; மூவர் பலி! 15 பேர் காயம்!!

(வல்வெட்டித்துறை)

உடுப்பிட்டிச் சந்தியில் நேற்று சிறிலங்கா விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் மூன்று இளைஞர்கள் கொல்லப்பட்டனர். பதினைந்து பேர் படுகாயமடைந்தனர்.

வல்வெட்டித்துறை, உடுப்பிட்டிச் சந்தியில் நேற்று சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த இரு குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசின. இத் தாக்குதலில் இருபது வயதிற்கு உட்பட்ட மூன்று இளைஞர்கள் உடல் சிதறி மரணமானார்கள். பதினைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்தநிலையில்மந்திகை வைத்தியசாலையிலும், மானிப்பாய் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (மு)

### மீராவோடையில்

## ராணுவம், ஊர்காவற்படைகள் ஆகியவற்றுடன் புலிகள் மோதல்

(மட்டக்களப்பு)

மீராவோடை ஊர்காவற்படையினருக்கெதிராக நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்ட போது ஊர்காவற்படையினருக்கு உதவியாக சிறிலங்கா இராணுவம் வந்துசேர்ந்தது இருதரப்பினருக்கும் எதிராக விடுதலைப் புலிகள் நீண்ட நேரம் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்த நீண்ட நேரத்தாக்குதலால் சிறிலங்கா இராணுவத்தினரும், ஊர்காவற்படையினரும் பெரும் இழப்புக்களுடன் முகாமிற்கு பின்வாங்கிச் சென்றனர். அவர்களின் இழப்பு விபரங்கள் தெரியவில்லை. (மு)

### கோட்டைக்கு 60யார் தொலைவிலிருந்த பண்ணைச்சந்தி

## திறந்த வெளிக்காவல் அரண் எதிரிக்குச் சவாலாக நின்றது

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த எமது காவல் அரணும், பண்ணைச் சந்தி உட்பட தொலைத்தொடர்பு நிலையத்தில் அமைந்திருந்த காவல் அரணும், இராணுவத்தினரினதும், விமானப்படையினரதும் பிரதான தாக்குதல் இலக்குகளாக இருந்தன.

ஆனால் இக் காவல் அரண்களைக் கைப்பற்ற இராணுவம் எடுத்த முயற்சியை எமது மனோ உறுதியை அடித்தளமாகக் கொண்ட தந்திரோபாயத்தைக் கடைப்பிடித்து திறந்த வெளியில் பண்ணைச் சந்தியில் முறியடித்தோம்- அமைந்திருந்த காவல் அரண் எதிரிக்குச் சவால் விடுவது போன்று நிமிர்ந்து நின்றது என விடுதலைப் புலிகளின் (6 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

இமானுவல் திரேசா என் பவருடைய காசோலை இல ( 828771 ) C. T. B யினால் வழங்கப்பட்டது. முத்திரை சந்திக்கும் ஆரியகுளச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (B/1500)

### தேவை

சகல வேலைகளும் நன்கு தெரிந்த பேக்கரி பாஸ் உடனடியாகத் தேவை. தகுதி உள்ளவர்களுக்கு சிறந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். றொலெக்ஸ் பேக் மாட், 118. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (R/735)

### நியூ வீனஸ்
### NEW VENUS

எமது அன்பான வாடிக்கையாளருக்கு ஒரு வேண்டுகோள் எமது ஸ்தாபனம் 153 A பலாலி வீதியில் (விவசாய பாடசாலை அருகில்)(NEAR FARM SCHOOL) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. (B/1470)

### டில்கா வாச் வேக்ஸ்
### (Dilka Watch Works)

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் (கிராம சபைக்கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. (B-1444)

### இடமாற்றம்
### பரீஸ் றெக்ஸ்

105, அரசடிறோட், தட்டாதெரு பிறவுண் வீதி சந்திக்கு அருகாமையில் எமது ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். (R-728)

### ரதி வோச் வேக்ஸ்

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோரர்ஸ் இல. 14 கஸ்தூரியார் வீதியில் இருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உபதபால் அலுவலகத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (B-1459)

### சித்ராலயா ஸ்ருடியோ

சித்ராலயா நிறுவனத்தினரின் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளை 351, கோவில் வீதி நல்லூர் (கம்பன் கோட்டம் முன்பாக) என்ற முகவரியில் காலை 9 மணி முதல் 12 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். மற்றும் மாலை 2 மணி முதல் 5 மணி வரை புகைப்படம் பிடிக்கப்படும். (B/ 1496)

### உடன் திரும்பவும்
(புங்குடுதீவு)

தற்போது முன்னறிவித்தல் இன்றி லீவில் நிற்கும் சகல ஊழியர்களையும் உடன் கடமைக்கு சமுகம் அளிக்குமாறு புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கதலைமையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (22)

## நிவாரணங்கள் வழங்கப்படுகிறது

(வேலணை)

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை ஆகிய பகுதிகளில் உள்ள அகதிகள் தொழில் இழந்தவர்களுக்கான நிவாரணங்களை சிறப்பாகக்கொடுத்து வருகின்றது.

இவர்கள் இந்தச் சங்கம் நிவாணங்களை கொடுத்து முடித்து விட்டு 2ஆம் கட்ட நிவாரணங்களை கொடுத்து வருகின்றது. (14)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
13-03-1967



வீரமரணம்
15-10-1988

### வீரவேங்கை ரதி
### (கந்தசாமி ரதிதரன்)
மானிப்பாய்

பாரத தேசம் விட்டு
பாரதப் படைகள் இங்கு
போரினைத் தொடுக்க வந்தார் - தமிழ்
புலிகளை அழிக்க வந்தார்

வந்தவர் வாலைவெட்டி
வந்த வழி போக வைத்து
இந்த மண் மானம் காத்த
வேங்கையே உனது சாவு

ஆண்டுகள் ஆயிரம் தான்
ஆகிய போதும் மக்கள்
வாழ்ந்திடும் வரைக்கும் நெஞ்சில்
வற்றாது நிறைந்திருக்கும்.

சுதுமலை வடக்கு, மானிப்பாய். (R-737) குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

## 45ஆம் நாள் அந்தியேட்டி

வீரவேங்கை
### லிங்கேஸ்
### (வெள்ளைத்தம்பி - சதீஸ்குமார்)
6ஆம் வட்டாரம் சாம்பல்தீவு

அன்னை மடியில்
08-04-1972

ஆண்டவன் அடியில்
02-09-1990



திருக்கோணமலை சாம்பல்தீவுக் கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் தி/ஆத்திமோட்டை தமிழ் மகாவித்தியாலயத்தின் O/L வகுப்பு மாணவனுமான வெள்ளைத்தம்பி சதீஸ்குமார் தமிழீழ மண்ணின் மீட்புக்கும், மக்களின் சுதந்திரத்திற்காகவும், போர்க்களத்தில் குதித்து முல்லைத்தீவு இலங்கை இராணுவ முகாமை கடந்த 02-09-1990இல் உக்கிரமாகத் தாக்கிய போது வீரமரணமடைந்துள்ளார்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக எதிர்வரும் 16-10-1990 எமது இல்லத்தில் நடாத்தப்படும் அந்தியேட்டியில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
அப்பா, அம்மா, அக்காமார், அண்ணன், தம்பிமார்.

முல்லையடி பளை.

B. 1502

## அடைக்கலம் வழங்கிய வீட்டில் கை வைத்த திருடன்

(கிளிநொச்சி)

அடைக்கலம் கொடுத்த வீட்டிலேயே பணத்தைத் திருடிக்கொண்டு ஓடிய இளைஞன் ஒருவன் வழிப்போக்கரால் வழிமறிக்கப்பட்டு விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டது.

இச் சம்பவம் கிளிநொச்சியிலுள்ள கனகபுரத்தில் நடைபெற்றது. இது பற்றி மேலும் தெரிய வந்துள்ளதாவது:-

இந்த இளைஞனின் சகோதரன் ஒருவன் ஏற்கனவே வேறு ஒரு இடத்தில் பணம் திருடியதால் அவனும், அவனது இரு சகாக்களும் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு புலிகளின் மாவட்ட முகாமில் பல நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவனைப் பார்ப்பதற்காக குமரபுரத்தைச் சேர்ந்தவர்களும், ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டத்தில் அகதிகளாகத் தங்கி இருந்தவர்களுமான இக் குடும்பத்தினர் தினமும் மேற்படி மாவட்டக் காரியாலயத்திற்கு வந்தனர்.

மாவட்டக்காரியாலத்திற்கு முன்னாலுள்ள வீட்டவர்களை சினேகிதம் பிடித்து அங்கு தங்கி. அவர்களின் உணவை உண்டு. காரியாலயத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மகனைப் பார்த்து வந்தனர்.

மேற்படிவீட்டில் தாயும், மகனும் தங்கியிருந்து விட்டு, அவர்களின் வீட்டிலிருந்து ஆயிரத்துக்கும் அதிகமான பணத்தை திருடிக் கொண்டு சென்றனர். பின் தாயும் மகனும் பொதுமக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டு பணம் மீட்கப்பட்டது. திருடன் விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டான்.

## ஊர்காவற்றுறைப் பகுதி மக்கள் வெளியேற்றம்

ஊர்காவற்துறை, கரம்பன், நாரந்தனை, சரவணை ஆகிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களில் பலர் இராணுவ நடமாட்டத்திற்குப் பயந்து வேறுபகுதிகளுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர். ஊர்காவற்றுறை சிவன் கோவிலடிப் பகுதியில் முகாமமைத்து தங்கியுள்ளள சிறிலங்கா இராணுவத்தினர் கரம்பன் காளி கோவில் வரை நடைபவனியாக வருவதுடன், அங்கு தங்கியுள்ள ஒரு சில பொதுமக்களை கூட்டி கூட்டங்களை நடாத்தி வருவதாகவும் அறியப்படுகின்றது. இதே வேளை இராணுவம் முன்னேறி குடிமனைப் பகுதிக்குள் நுளைவதாக சிலர் வதந்தி பரப்புவதனால் புளியங்கூடல் வேலணைப்பகுதி மக்கள் அடிக்கடி இரவு, பகல் பாராது வெளியேறி ஓடுவதும், பின்னர் தமது இல்லங்களுக்குத் திரும்புவதுமாக உள்ளனர்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### சித்த மருத்துவத்துறை, கைதடி

சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்கு 89 – 90ஆம் கல்வி ஆண்டிற்கான விரிவுரைகள் நவம்பர்மாதம் ஆ5ம் திகதி ஆரம்பமாகவுள்ளன. 1989 - 90 ஆம் கல்வி ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை சென்ற யூன் மாதம் 11 ஆம் திகதி நடைபெற்றது. அன்றைய தினம் சமுகமளித்த எல்லா விண்ணப்பதாரரும் நவம்பர் 5 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தேர்வுக் கிளையில் 89 - 90 ஆம் ஆண்டிற்கான சித்த மருத்துவத்துறை மாணவர்களாகப் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். விரிவுரைகளும் அன்றைய தினம் ஆரம்பமாகும். புதிய மாணவர்களுக்கான கடிதங்கள் கூடிய விரைவில் அனுப்பப்படும். தங்கள் விலாசங்கள் மாறுபட்டிருப்பினும் நேரடியாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தேர்வுக் கிளையில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(B 1494) பதிவாளர்

## பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்

### பதவி வெற்றிடங்கள்

(1) கிளை முகாமையாளர்கள் (அமையம்)
(2) லொறிப் பாதுகாவலர்கள் (நிரந்தரம்)
(3) காவலாளிகள் (நிரந்தரம்)

மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. எமது சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்கட்கு முன்னுரிமையளிக்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை எமது சங்கத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இப்பதவிகளுக்கானவயதெல்லை 18 முதல் 45 வரை. (சங்கத்தின் சேவையிலிருப்போருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டா) மேலும் கல்வித்தகைமைகள், வேதனம் பற்றிய விபரங்களை சங்கத் தலைமையலுவலகத்தில் பார்வையிட்டு அதன் பிரகாரம் உங்கள் விண்ணப்பங்களை கல்விச் சான்றிதழ். நற்சான்றிதழ். அனுபவச் சான்றிதழ், வதிவிடத்தகைமைச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் ''தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு 1990 - 10 - 25 ஆம் திகதிக்குமுன் கிடைக்கக் கூடியதாக நேரில் / பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கவும். மேலும், நீங்கள் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் என்ன பதவிக்கு விண்ணப்பிக்கப்படுகின்றதோ அப்பதவியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

1990 – 10 – 10. (B 1493)

# பல லட்சம் பெறுமதியான கேபிள்கள் வீதியில்

(தீவுப்பகுதி)

சிறிலங்கா இராணுவம்தமது இராணுவ நடவடிக்கையின் போது அல்லைப்பிட்டி, மண்டைதீவு பகுதிகளிலுள்ள மின்சாரக் கம்பங்களை தறித்து வீழ்த்தி தமது சென்றிகளுக்கு பயன்படுத்தியுள்ளதுடன் அதன் மின்சார கேபிள்களை அந்த இடத்திலேயே விட்டுச் சென்றுள்ளனர். லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள இப் பொருட்கள் திருட்டுப் போக கூடிய நிலையில் இருப்பதாகவும் இவற்றை இலங்கை மின்சார சபை பாதுகாப்பாக எடுத்து வைத்தல் வேண்டுமெனவும் அண்மையில் இப் பகுதிகளை பார்வையிடச் சென்ற தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (15)

# கண்ணைத் திறந்து பார்த்தேன்
## அனைவரும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்

(சாவகச்சேரி)


ஹெலி தலைக்கு மேலே நிற்கின்றது. ஆகவே எனக்கு எதுவித பயமும் இல்லை என்று நினைத்து எனது வியாபாரத்தை தொடர்ந்த நான், திடீரென பலத்த வெடிஓசை கேட்டபோது நிலத்தில் வீழ்ந்து படுத்தேன். சிறிது நேரத்தில் எங்கும் புகைமண்டலமாக காட்சி தந்தது. புகை கலைந்ததும் என்னைச் சூழ நின்றவர்கள் எல்லோரும் நிலத்தில் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். நான் உயிர் தப்பியதை என்னாலேயே நம்பமுடியவில்லை எனகடந்த செவ்வாய்க்கிழமை பன்னிரெண்டு பேரின் உயிரை காவு கொண்ட சாவகச்சேரி சந்தை ரொக்கட் தாக்குதலில் அகப்பட்டு எதுவித காயமும் ஏற்படாது தப்பிய ப. குகன் என்ற இளம் வியாபாரி தனது அனுபவத்தை கூறினார்.

குண்டு வெடிப்பிலிருந்து தாம் தப்பிய சம்பவம் குறித்து அவர் கூறுகையில், தான நின்ற இடத்திற்கு சரி நேரே குண்டு வீழ்ந்து வெடித்தது. ஆனால் இடையில் ஒரு மின் கம்பம் நின்றதால் தன்னில் எதுவித காயமும் ஏற்படாததை அந்த மின்கம்பம் முறிந்து வீழ்ந்ததிலிருந்து தெரிந்து கொண்டதாகவும் அவர் கூறினார்.

குண்டு வீழ்ந்து வெடித்ததும் எங்கும் ஐயோ அம்மா என்ற அவலக் குரல்கள் மட்டுமே கேட்டன. சிறிது நேரம் எதுவுமே தென்படவில்லை. பின்பு என் முன்னால் இருந்து வியாபாரம் செய்து கொண்டிருந்த சந்தராசா அண்ணையும் அவருடைய மனைவியும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். அவர்களுக்கு பின்னால்மட்டுவிலைச்சேர்ந்த இரண்டு சகோதரர்கள் வியாபாரம் செய்து கொண்டு இருந்தவர்கள், அவர்களும் இரத்தவெள்ளத்தில் கிடந்தனர்.

கந்தராசா அண்ணை அந்த இடத்திலேயே உயிரைவிட்டார். அவருடைய குடல் வெளியே தெரிந்தது. அவருடைய மனைவி காலில் பெரிய வெட்டுக் காயத்துடன் முனகியபடி கிடந்தார். உடன் சுற்றுப்புறத்திலிருந்து ஓடிவந்தார்கள். அவரைத் தூக்கிக் கொண்டு வைத்திய சாலைக்கு ஓடினர். இவர்கள் இருவருக்கும பின்னால நின்ற இரண்டு சோதரர்களில் ஒருவர் அந்த இடத்திலேயே இறந்து போனார். மற்றவர் கால்கள் சிதறிய நிலையில் வேதனை தாங்க முடியாது அலறினார். அவரை நானும் இன்னும் ஒருவருமாகத் தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினோம் என்றும் அன்று மாலைஅந்தச்சகோதரரும்உயிரிழந்ததாக அறிந்ததாகவும் குகன் கூறினார். (லோ)

# இருபத்தைந்தாம் மாத நினைவு அஞ்சலி



வீர ஜனனம்
15 — 11 — 1959

வீர மரணம்
13 — 09 — 1988

## லெப்ரினன்ட் குகன்
## (இ. இளஞ்செழியன்)

அத்துளு - கரவெட்டி

வீரமறவர் குலத்தில் உதித்தவன்
வீறு கொண்ட வேங்கையாய்த் திகழ்ந்தவன்
கோரச் செயல்களை கண்டு கொதித்தவன்
கொள்கை வீரர் படைதனில் சேர்ந்தவன்
வீரத்தால் எதிரி படைகளை எதிர்த்தவன்
விடுதலை காண நித்தமும் உழைத்தவன்
பாரதப் படைகளின் பாதகச் செயல்களால்
பாரினில் தனது உயிரதை நீத்ததால்!
வீரன் இவனுக்கு அஞ்சலி செலுத்துகிறோம்
விட்டிட்ட பணியினைத் தொடரச் செல்கின்றோம்.

தாய், தந்தை, சகோதர, சகோதரிகள்,
நண்பர்கள்,

(B-1501)

# மண்டைதீவு, அல்லைப்பிட்டியில் திருடர் தொல்லை அதிகரிப்பு

(தீவுப்பகுதி)

அல்லைப்பிட்டி, மண்டைதீவுப் பகுதிகளில் இருந்து இராணுவம் வெளியேறிய பின்பு திருட்டுக் கோஷ்டியினர் இரவோடிரவாக அப்பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள வீடுகளில் இராணுவத்தினால் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் மிஞ்சியவற்றையும் வீட்டுத்தளபாடங்களையும் திருடிச்சென்றுவருகின்றனர். மேலும் வேலணைப் பகுதிகளிலும் மக்கள் இடம்பெயர்ந்த வீடுகளில் திருடர்கள் பெறுமதிமிக்க பொருள்களை திருடிச்சென்றுள்ளனர். (15)

## ஊதியம் வழங்கப்படவில்லை

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் சிறைச்சாலைத் திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கடந்த மூன்று மாதங்களாகச் சம்பளம் கிடைக்கவில்லை. சம்பள முற்பணமும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை.

கடந்த மூன்று மாதங்களாக வேதனம் இன்றிப் பலத்த சிரமத்தின் மத்தியில் இவர்கள் வாழ்க்கை நடாத்துவதாக அங்கு கடமையாற்றும் ஊழியர் தெரிவித்துள்ளார். (24)

# இறந்த சக உறுப்பினர் குடும்பத்திற்கு 2,500 ரூபா உதவி

(விசேட நிருபர்)

வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கம், கடந்த ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி 'சகடை' விமானத்தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த உறுப்பினர் குடும்பத்திற்கு 2,500 ரூபா உதவியாக வழங்கியுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி யாழ். நாச்சிமார் கோவிலடி சுடரொளி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற வைபவத்திற்கு சங்க உப தலைவர் திரு. இராமச்சந்திரன் தலைமை வகித்தார். பொருளாளர் மு. குமாரசாமி, மரணித்த ஞானமுத்து உதயகுமாரின் மனைவியிடம் மேற்படி தொகையைக் கையளித்தார்.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா ஏ ஜி. டாஸ், செயலாளர் திரு. தியாகராசா ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். (21)

## கலந்துரையாடல்

மாவீரர் தினத்தையொட்டி மரம் நடுகைத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தும் முகமாக கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. இக் கலந்துரையாடலுக்குவிவசாயஉதவிப்பணிப்பாளர்,வன இலாகா அதிகாரி, மாநகர சபை ஆணையாளர், நகர சபைச் செயலாளர்கள், பிரதேசசபை உத்தியோகத்தர்கள், உப அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகள் சனசமூக நிலைய சம்மேளன சமயாசமய அங்கத்தவர்கள், சனசமூக நிலையங்களின் தலைவர்கள் செயலாளர்கள் உட்படப்பலர் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நாளை16 10 90காலை பத்து மணிக்கு பல்கலைக்கழகத்தின கைலாசபதி கலை அரங்கில் மேற்படி கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

## பதவி உயர்வு

(கொழும்புத்துறை)

யாழ். பிரதம தபாலதிபராகக் கடமையாற்றிய திரு. சு. பராசசிங்கம் பதவி உயர்வு பெற்று இன்று திங்கட்கிழமை முதல் முல்லைத்தீவு மாவட்ட தபால் அத்தியட்சகராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். (24)

## இடமாற்றம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத்தெருவீதியில் செயல்பட்டுவந்த யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகம் கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள 25ஆம் இலக்க வீட்டில் தற்காலிகமாகச் செயல்பட்டுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது (24)

## பொதுச்சந்தை அமைக்கப்படும்

(தீவுப்பகுதி)

வேலணையில் பொதுச் சந்தை இல்லாத குறைபாட்டை நீக்கி வைக்கும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் வேலணை வங்களாவடிச் சந்தியில் பொதுச் சந்தை அமைத்துக் கொடுக்க முன்வந்து இதற்கான வேலைகளைச் செய்வித்து வருகின்றனர்.

இச்சந்தை திறக்கப்படும் பட்சத்தில் இப்பகுதி மக்களினதும், வியாபாரிகளினதும் நீண்டநாள் குறைபாடுகள் நீங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (15)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. சுப்பையா நவரத்தினம்

(ஓய்வு பெற்ற சிறாப்பர் நீர்ப்பாசன இலாகா, கல்கமுவ)

தோற்றம்:
25 - 06 - 1931

மறைவு:
19 - 10 - 1987

திதி: 15 - 10 - 1990

பாசமலையொன்று சரிந்து விழுந்தது - அதன்
நேச உறவுகள் நினைவில் துடிக்குது
குடும்ப விருட்சத்தின் விழுதாய் .. இருந்தவர்
குவலயம் மறந்து... சென்றது எங்கேயோ...
மனித வாழ்க்கையில் உங்களை மறப்பது எப்படி
மரணம்கூட .. தோற்றுத்தான்... போனதே
நல்லவர்... பாதையில் நடைபயின்ற - ஆன்மா
நாயகன் பாதத்தில் அடைக்கலமாகட்டும்...

உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


டச்சு றோட்,
கோப்பாய் தெற்கு,

மனைவி, மகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

(R- 733)

# 45-ம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்
22 - 01 - 1969



வீரமரணம்
0[illegible] - 09 - 1990

## லெப். அகிலன்

(முல்லைத்தீவில் இலங்கை இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணம்)

போர் முனைக்குச் செல்லும் போராளிகள்
திரும்பி வருவார்கள் — நிச்சயமாக
சிலர் கனவுகளிலும் நினைவுகளிலும் மட்டும்
எம் நினைவுகளிலும், கனவுகளிலும்
வாழ்கின்ற வேங்கைகளே
நீங்கள் காலத்தால் அழியாத
காவிய நாயகர்கள்,
ஆம் தமிழீழ மண்ணின் காவிய நாயகர்கள்.

உதயநகர்
கிளிநொச்சி.

பொன்னுச்சாமி குடும்பத்தினர்.

(B-1498)

## க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கான அறிவித்தல்

# நாட்டின் சுபீட்சத்தை நோக்கிய பாதையில்.....

க. பொ. த. உயர்தரம் 92ஆம் ஆண்டிற்கான
கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகளைச் சேர்ந்த
மாணவர்களுக்கான கலந்துரையாடல்

**18-10-1990 (வியாழன்) பிற்பகல் 3-00 மணி**

க. பொ. த. உயர்தரம் 90, 91ஆம் ஆண்டுகளுக்குரிய
கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகளைச் சேர்ந்த
மாணவர்களுக்கான கலந்துரையாடல்

**19-10-1990 (வெள்ளி) பிற்பகல் 3-00 மணி**

அனைவரும் சமுகமளிக்கவும்.

# எங்களுடன் இணைந்து -கொள்ளுங்கள்

- திரு. வரதராஜன்
- திரு. ஜெயராம்
- திரு. மரியதாஸ்
- திரு. சுப்பிரமணியம்
- திரு. வைகுந்தநாதன்
- திரு. ஸ்ரனிஸ்லாஸ்
- திரு. முருகையா
- திருமதி சுப்பிரமணியஐயர்
- செல்வி உமாசங்கரி

UNIVERSAL
FOR GOD AND COUNTRY

- திரு. நாகநாதன்
- திரு. நந்தகுமார்
- திரு. செல்வரட்ணம்
- திரு. சந்திரமோகன்
- திரு. ஐங்கரநேசன்

# யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(B 1503)

## சிந்தனைக்கு

ஏகாதிபத்தியம் இறைவனை மறுதலிப்பதாகும். தெய்வத்தின் பெயரால், தெய்வத்திற்கு ஒவ்வாத செயல்களை அது செய்கிறது.

- மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 15-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# கண்துடைப்பு

"தமக்கு உதவி வழங்கும் நாடுகளில் இருந்து நிதியுதவியைப் பெறுவதற்காகவே சிறிலங்கா அரசாங்கம் இராணுவ நடவடிக்கையைத் தளர்த்தியுள்ளது'' இது பி. பி ஸியின் செய்தி விமர்சனம்.

1983 ஆம் ஆண்டிற்குப் பின்னர், வருடாவருடம் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடுகள் வருட இறுதியளவில் பாரிஸில் நடைபெறும்போது, இலங்கையில் அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகளை தளர்த்துவதும், அதை பி பி ஸி போன்ற மேற்கத்தைய செய்தி நிறுவனங்கள் அரசியல் விமர்சனங்கள் என வெளியிடுவதும் வழமையாகநடைபெறும் விடயங்களாகும்.

ஆனால் 1983 ஆம் ஆண்டில் இருந்து வருடாவருடம் வடக்கு - கிழக்கில் இனபபடுகொலைகளும், அரசியல் படுகொலைகளும், பழிவாங்கல்களும் அதிகரித்துக் கொண்டே சென்றுள்ளன. கடந்த மூன்று மாதத்தில் 3000 க்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேபோன்றேவருடாவருடம்உதவிவழங்கும்நாடுகளின் நிதி உதவியும் வருடாவருடம் அதிகரித்துக்கொண்டே சென்றுள்ளன. எந்த வருடத்தில் ஆயினும் நிதி உதவியில் வெட்டு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வாறானால் உண்மையில் நடப்பது என்ன? வெறும் கண்துடைப்பு.

உதவி வழங்கும் நாடுகளும், உதவி பெறும் நாடுகளும், பி. பி ஸி. போன்ற மேற்கத்தைய செய்தி ஸ்தாபனங்களும் சேர்ந்து ஒடுக்கப்படும் மக்களை ஏமாற்றுகின்றன என்பதே உண்மை.

உதவி வழங்கும் நாடுகளும், அவற்றின் கொம்பனிகளும் ஒரு வாரமோ, ஒரு மாதமோ யுத்தத்தை நிறுத்திவிட்டு நாட்டில் சண்டை ஓய்ந்துவிட்டது அல்லது முடிந்துவிட்டது அபிவிருத்திக்கு நிதி தாருங்கள் எனக் கேட்கும்போது தூக்கிக் கொடுத்துவிடக்கூடியவர்கள் அல்லர். அந்தளவிற்கு அவர்கள் ஏமாளிகளும் அல்லர். உதவி பெறுபவர்கள் மகாபுத்திசாலிகளும் அல்லர்.

உதவி வழங்குபவர்கள் 'உலகத்தையே சுருட்டி, வாயில்போட்டவர்கள்.'' வருடம் பூராவும்தமதுலாபத்தையே கணக்குப்பார்ப்பவர்கள். அவர்களுக்கு இலங்கையிலோ, தாங்கள் உதவிவழங்கும் நாடுகளிலேயோ என்ன நடக்கின்றது என்பது தெரியாமல் இல்லை. சில நாடுகளில் நாட்டின் அதிபருக்குத் தெரியாதது கூட அவர்களுக்குத் தெரியும். இவ்வாறானவர்கள் மாநாடு நடக்கும் ஒரு மாதத்திற்கு முன்னர் ஆயிரக் கணக்கில் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை அவர்களுக்குத் தெரியாததோ அல்லது மறந்து விடக்கூடியவர்களோ அல்லர். சுருக்கமாகச் சொன்னால் அவர்கள் வியாபாரிகள். இலாபமே அவர்கள் எண்ணம்.

ஆகையினால் உலகைத் திருப்திப்படுத்தும் நோக்கில் உதவிபெறும் அடக்குமுறை அரசுகளுடன் மறைமுக உடன்பாட்டிற்கு வருகின்றார்கள். இருவரும் சேர்ந்து இடைக்கால அமைதியைப் பேண முற்படுகின்றார்கள்.

உதவிபெறும் நாடுகளில் யுத்தம் நடைபெறுவது உதவிவழங்கும் நாடுகளுக்கு கசப்பான காரியமல்ல. அதுவே அவர்களுக்கு லாபகரமானது. அதாவது யுத்தத்தை செய்யும் உதவிபெறும் உலகநாடுகள் மேலும் மேலும் அவர்களைச் சார்ந்திருக்கும் நிலையேயுத்தத்தால் ஏற்படுகின்றது. இதனால் அவர்களின் வருமானம் பெருகுகிறது.

எடுத்துக்காட்டாக போதைப் பொருளை அடுத்து இன்று உலகில் பணம் சம்பாதிக்கும் அடுத்த பிரதான வியாபாரம் ஆயுத விற்பனையாகும். உதவிபெறும் நாடுகள் அநேகமாக ஆயுத உற்பத்தி நாடுகள் அல்ல. யுத்தத்திற்காக பெருமளவில் ஆயுதங்களை அவர்கள் இறக்குமதிசெய்கின்றார்கள். இந்த ஆயுத உற்பத்தியாளர்களில் பிரதானமானவர்கள் இந்த நாடுகளுக்கு உதவி வழங்கும் நாடுகளே ஆகும்.

இவ்வாறு லாபம் அடையும் உதவி வழங்கும் நாடுகள், தமக்குச் சாதகமாக தமது செல்வாக்கினுள் இருக்கும் செய்தி ஸ்தாபனங்களையும் தொலைத் தொடர்பு சாதனங்களையும் பாவித்து உதவிபெறும் நாடுகளில் ஒடுக்கப்படும் மக்களையும், ஏனைய நாடுகளில் இருந்து வரும் எதிர்ப்புக்களையும் திருப்திப்படுத்த முனைகின்றன.

இம்முயற்சியை பி.பி ஸி போன்றசெய்திநிறுவனங்கள் பூர்த்தி செய்கின்றன. அடக்கப்படும் மக்களுக்காகக் குரல் கொடுப்பது போன்ற தொனியில் மேற்கத்தைய நலனைப் பேணுவதில் இவை முன்னணி வகிக்கின்றன. அடக்கப்படும் மக்களை நம்பவைப்பதில் தீவிரமாகச் செயற்படுகின்றன.

இதனை உண்மையென மூன்றாம் உலக நாட்டு மக்களில் அனேகர் நம்பிவிடுவதும் உண்டு. அவ்வாறு மக்களை நம்பச் செய்வதற்கு மூன்றாம் உலக நாடுகளின் வெகுசனத் தொடர்பு சாதனங்களும் தம்மையும் அறியாமல் துணை போகின்றன.

# தமிழரை அடித்துப் பணியவைக்கும் கொள்கை ஆட்டம் காண்கிறது

தற்போதைய யுத்தத்தை தொடர்ந்து நடாத்துவதில் சிறிலங்கா அரசு பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றதுஎன்பதைஊகிக்கக் கூடியபல செய்திகள் அண்மை நாட்களில் வெளிவரத் தொடங்கியுள்ளன. பற்றாக்குறை நிலவும் பட்ஜெட்டைக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசு பாதுகாப்பிற்கு சுமார் 1500 கோடி ரூபாய் வரையில் ஒதுக்க வேண்டியுள்ளது. ஒருபுறம், வளைகுடா நெருக்கடியினால் உலகத்தில் ஏற்பட்ட பதட்டம் இன்னொருபுறம், கொக்காவில், யாழ்கோட்டை போன்ற தரைப்போர்முனைகளில் சந்தித்த தோல்விகளினால் இராணுவத்தினரின் மனநிலையில் ஏற்பட்டுள்ள சோர்வு மறுபுறம். இவற்றின் காரணமாக இராணுவரீதியில் தமிழர்களை மிரட்டிப் பணிய வைத்து விடலாம் என்ற நம்பிக்கை தற்போது அரசாங்க மட்டத்தில் ஆட்டம் காணத் தொடங்கியிருக்கின்றது எனலாம்.

அரசாங்கத்தின் உட்சுற்றுச் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் பொதுமக்கள் தொடர்பு சாதனங்களில் வெளியாகும் கருத்துக்கள் இத்தகையஊகங்களுக்கு இடமளிக்கின்றன.

1971இல் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் ஜே வி. பீ. யின் பெயரால் கொன்றொழிக்கப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். ஆனால் அரசுக்கெதிரான ஆயுதப் போராட்டம் ஓய்ந்து போய்விடவில்லை. சுமார் இருபது ஆண்டுகள் கழிந்த பின்னாலும் ஜே. வி. பி.யின் முக்கிய தலைவர்கள் அழிக்கப்பட்டுள்ளனர் என்று ரஞ்சன் விஜேரட்ணா மார்பு தட்டிக் கொண்ட போதிலும் கூட ஜே. வி. பியின் அச்சுறுத்தலிருந்து நாடு இன்னமும் விடுபட்டு விடவில்லை. தமிழர்களின் ஆயுதம் தாங்கிய போராட்டத்தையும் இதுவரை கால இராணுவ நடவடிக்கைகளால் அடக்கி விட முடியவில்லை என்று டெய்லி நியூஸ் (Daily News) இதழில் குறிப்பிட்டிருக்கிறார் ஜெகான் பெரேரா. அவர் மேலும் குறிப்பிடுகையில்

## இனியவன்

''இன்றைய யுத்தம் நாங்கள் விரும்பாத யுத்தம். ஆனால் நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம். அரசாங்கத் தரப்பிலோ, எதிர்க்கட்சித் தரப்பிலோ, மக்கள் மத்தியிலோ, இந்த யுத்தம் தொடரப்பட வேண்டும் என்ற ஆவல் தற்போது பெருமளவுக்கு இல்லை ஏராளமான பொதுமக்கள், புலிகளின் போராளிகள் மற்றும் இராணுவத்தினர்கொல்லப்பட்டுவிட்டனர்.

ஆனாலும் தொடரப்படும் யுத்தமானது நம்பிக்கையூட்டுவதாகவும் இல்லை. மனிதாபிமான அடிப்படையைக் கொண்டதாகவும் இல்லை. எனக் கூறி பெரும்பாலான மக்களின் ஜனநாயக அபிலாஷைகளைக்கவனத்தில் எடுத்து தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் ''என அரசை வலியுறுத்தி இருக்கின்றார்.

இதேவேளை சர்வகட்சி மாநாடு என்ற பெயராலும், அரசியற்கட்சிகளுடன் ஆலோசனை என்ற வகையிலும் இன்ன பிறவுமாக அரசியல் தீர்வொன்றைக் காண ஆர்வமுடையவராக ஜனாதிபதி தன்னை இனம் காட்டிக் கொள்கின்றார். வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பது, தமிழ்பேசும் மக்களின் தாயகத்தை அங்கீகரிப்பது போன்ற விடயங்களைச் சாதிப்பதற்கு எதிர்க்கட்சிகள்தான் முட்டுக்கட்டை போடுகின்றன என்று அர்த்தப்படுத்தக்கூடிய வகையில் நிகழ்ச்சிகள் நடந்தேறுகின்றன. அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாகஅடிக்கடி மாநாடுகளில் பேசப்படுவதாகத் தெரிய வருகின்றது.

எனினும் தமிழர்களின் அடிப்படை அரசியல் அபிலாஷைகளை ஏற்க மறுக்கும் சிங்கள இனவாதமும், படை பலத்தைப் பிரயோகிப்பதன் மூலம் தமிழரைப் பணிய வைக்கலாம் என்ற இறுமாப்புக்கொண்ட நிலையில் அரசாங்கம் தொடங்கியதே இந்த யுத்தமாகும். இதனை உணர்ந்து கொண்ட விடுதலைப் புலிகளின் விட்டுக்கொடுக்காத உறுதியும், தீவிரமான போராட்ட முன்னெடுப்புகளும் அரசை நிலைதடுமாறச் செய்வதாக உள்ளன.

(தொடரும்)

# பாக்தாத்தில் அமெ. - பிரிட்டனுக்கு எதிராகக் குழந்தைகள் பேரணி

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்காவிற்கும் பிரித்தானியாவிற்கும் எதிராக குழந்தைகள் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் பிரித்தானிய தூதுவராலயத்திற்கு முன்னால் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தினர்.

ஈராக்கிய குழந்தைகள் தினத்தை முன்னிட்டு ஊர்வலத்தை நடத்திய குழந்தைகளில் பலர் வெறும் பால் புட்டியுடன் காணப்பட்டனர்.

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசையினுக்காக தங்கள் உயிர்களையும், குருதியையும் கொடுக்கத் தயாராக உள்ளோம் என்ற வாசகம் பொறிக்கப்பட்ட அட்டை குழந்தைகளால் கொண்டு செல்லப்பட்டது.

# கர்நாடகாவில் ஜனாதிபதி ஆட்சியை விலக்கக் கோரிக்கை

(டில்லி)

கர்நாடக மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சிப் பிரகடனத்தை விலக்கிக் கொள்ள வேண்டுமென இந்திரா காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் இந்தக் கட்சியைச் சேர்ந்த 150 பாராளுமன்ற உறுப்பினர்கள் புதுடில்லியில் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று இது குறித்த மகஜர் ஒன்றை ஜனாதிபதி ஆர், வெங்கட்ராமனிடம் கையளித்தனர்.

அதேவேளை கர்நாடக மாநில முன்னாள் முதலமைச்சர் வீரேந்திரபட்டேல் கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு கட்சியில் இருந்து விலக்கப்பட்டார் என இந்திரா காங்கிரசின் பொதுச் செயலாளர் பலராம் ஜாக்கர் அறிவித்துள்ளார்.

# உதவிபெற, அணுஆயுதம் இல்லை என உறுதிப்படுத்த வேண்டும்

(வாஷிங்டன்)

பாகிஸ்தான் தன்னிடம் அணுஆயுதம் எதுவும் இல்லை என்று உறுதியாக நிரூபித்தால் அன்றி உதவி வழங்கப்பட மாட்டாது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது பற்றி அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ்பேகர் பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் சாகிம்சதாயா கூப்கானிடம் தெரிவித்தார்.

புதிய நிதி உதவியை பெற பாகிஸ்தான் மேலும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும்என்றும் ஜேம்ஸ்பேகர் கூறினார்.

இதேவேளை இம் மாதம் 24ஆம் திகதி பாகிஸ்தானில் நடைபெற இருக்கும் பாகிஸ்தானின் பொதுத் தேர்தல்களுடன் இணைந்து அந்நாட்டிற்கான ராணுவ உதவியை அதிகரிக்குமாறு அமெரிக்காவின் இரு சபைகளும் கருத்துத் தெரிவித்தன.

ராமஜன்ம பூமி, பாபர்மசூதி பிரச்சினை

# சுமுகமான தீர்விற்கு சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை

(டில்லி)

இராமர் பிறந்த இடம், பாபர் மசூதி பிரச்சினைக்கு சுமுகமான முறையில் தீர்வு காணும் ஒரு பகுதியாக சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக இந்தியப் பிரதமர் வி. பி. சிங் அறிவித்துள்ளார்.

இரு சமூகத்தாருக்கும் ஏற்புடைய வகையில் இப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் எனத் தாம் விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

இம்மாதம் 17 ஆம் திகதி இக் கூட்டம் நடைபெறும் என்று குறிப்பிட்ட பிரதமர் வி. பி. சிங் அதற்குப் பின்னர் சர்வோதய தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக தெரிவித்தார்.

இதற்கு முன்பாக இரு மதங்களின் சமயத் தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பாடசாலைகளில் பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பணிப்பு

(அலுவலக நிருபர்)

பாடசாலைகள் யாவும் இன்று திறக்கப்படவிருப்பதால் பாடசாலை அதிபர்கள் யாவரும் தத்தமது பாடசாலைகளில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு யாழ் கல்விப்பணிப்பாளர் பணித்துள்ளார்.

பாடசாலைக் கட்டடங்களில் வெள்ளை, கருநீல நிறத் துணிகளினால் சேர்த்துத் தைக்கப்பட்ட கொடிகளை வானத்தில் இருந்து பார்க்கும் பொழுது தெளிவாகத் தெரியும் வண்ணம் பறக்கவைக்க வேண்டும். பாதுகாப்பை முன்னிட்டு இக் கொடியின் நிற அமைப்பு செஞ்சிலுவைச் சங்க மூலம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகள் மேலே இருந்து பார்க்கும்போது தெரியாதவாறு பாதுகாப்பான இடங்களில் நிறுத்திவைத்தல் வேண்டும் என்றும்,

பாடசாலை விடும்பொழுது மாணவர்களை வகுப்புரீதியாக ஐந்துநிமிட இடைவேளையில் மாணவர் தலைவர்கள், சாரணியர்கள், ஆசிரியர்கள் உதவியுடன் பாதுகாப்பாக வெளியேசெல்ல அனுமதிக்கவேண்டும் என்றும் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

பாடசாலைகளில் முதலுதவிப்பெட்டிகளில் அவசர சிகிச்சைக்கு ஏற்ற மருந்துவகைகளைப் பேணி வைத்திருப்பதோடு, முதலுதவிப்பயிற்சி பெற்ற மாணவர்களைத் தயாராக வைத்திருக்க வேண்டும். அத்துடன் பாடசாலை நேரத்தில் மாணவர்களை எக்காரணங்கொண்டும் பாடசாலை வளவுக்கு வெளியே அனுமதிக்கக்கூடாது எனவும், ஐம்பது பேருக்கு ஒரு பதுங்கு குழி என்ற அடிப்படையில் அமைத்து விரைவாக பதுங்கு குழிகளுள் புகும் பயிற்சிகளை முன்கூட்டியே ஒத்திகை பார்க்கப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (மு)

## மின்மாற்றி ஒயில் திருடிய மூவர் பிடிபட்டனர்

(வடமராட்சி)

நெல்லியடிப் பிரதேசத்தில் மின்மாற்றியிலிருந்து ஒயில் திருடிய மூவர் விழிப்புக்குழுவினரால் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு கரவெட்டி வட்டவைப் பொறுப்பாளர் குணபாலனிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில் ஒயில் திருட்டில் ஈடுபட்ட இம்மூவரும் மயிலிட்டியிலிருந்து திட்டமிட்டு வந்தே இத்திருட்டை மேற்கொண்டனர்.

இவர்களை துன்னாலை விழிப்புக்குழுவினர் கைது செய்து மேற்படி வட்டவைப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் நெல்லியடி நகர் எங்கும் மேற்படி திருட்டுதொடர்பான சுலோக அட்டையை கழுத்தில் கொழுவிய வண்ணம் உலாவந்ததை அவதானிக்க முடிந்தது (18).

## உடனடியாக விபரம்தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைகள், அரசினர்வைத்தியசாலைகளில் விசர்நாய்கடி மற்றும் பாம்புக்கடி, விஷகடிகளினால் மரணமானவர்களினது பெயர் விபரங்களைத் தாமதியாது தயாரித்துத் தரும்படி மானிப்பாயில் செயற்பட்டுவரும் செஞ்சிலுவைச் சங்கப் பிரிவு கோரியுள்ளது. (24)

## வடமராட்சியில் விழிப்புக்குழு தீவிரசெயற்பாடு

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியெங்கும் விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றன.

அவ்வப்பகுதி மக்களைக் கொண்டு அமைக்கப்படும் இவ்விழிப்புக்குழுக்கள் கொள்ளை, களவு, சந்தேகத்துக்கிடமானவர்களின் நடவடிக்கைகளை அவதானிப்பார்கள்.

விடுதலைப் புலிகளின் மேற்பார்வையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இவ்விழிப்புக்குழுக்களுக்குக்கவிஞர் மு.வே.யோ. வாஞ்சிநாதன் பொறுப்பாக இருக்கின்றார். (18)

**பாதுகாக்கும்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னார். கொக்குவில் மத்தி சிற்றூரவைத் தலைவர் திரு. கே. இராசேந்திரன் தலைமையில் இக் கூட்டம் பிரம்படியில் இடம்பெற்றது. திரு. மோகன் மேலும் பேசுகையில் பொதுமக்களின் ஆதரவும் எமது இயக்கத்தின் நெஞ்சுரம் படைத்த போராட்டமும் இந்திய இராணுவத்தை தோல்வியைக்காணவைத்தது. எமது மண்ணைவிட்டு இந்திய இராணுவத்தை வெளியேற்றியது எனக் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி சித்திரா பேசுகையில் தற்போது இலங்கை இராணுவத்துடன் நடைபெறும் போர் தமிழீழம் மீட்பதற்கானது. இந்த இறுதி யுத்தத்தில் பெண்களின் பங்கு முக்கியத்துவம்பெறுகிறது. இதனை மேலும் வலுப்படுத்த அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பெண்கள் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் தலைமைக் காரியாலயப் பொறுப்பாளர் திரு. குணம் அவர்கள் உட்பட வட்டவைத் தலைவர் திரு. பொ. கணபதிப்பிள்ளை, செயலாளர் புவனேந்திரராசா, பொன்னம்பலம், சந்திரசேகரம் போன்ற முக்கிய பிரமுகர் பலரும் உரையாற்றினர். ஏராளமான பொது மக்கள் இந் நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்தனர்.

## பல்க.மாணவர் சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வெளிமாவட்ட மாணவர்கள் தமது பெயர்களை கடந்த ஒகஸ்ட் மாதம் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் பதிவு செய்து இதுவரை வீடு திரும்பாதவர்கள் இன்று திங்கள் காலை 9.00 மணிக்கு ஆனந்த குமாரசாமி விடுதிக்கு சமுகம் அளிக்குமாறு யாழ் பல்கலைக்கழக மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியம் கேட்டுக்கொள்கிறது.

**ஐ. நா. உயர்ஸ்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் பாதுகாப்பு மன்றமும் மகஜர்களை உயர்ஸ்தானிகராலயத்திடம் சமர்ப்பிக்க உள்ளன. (24)

**ஊர்காவற்றுறை**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது மேற்கொள்ளப்படுகின்றது. இத்தகைய நடவடிக்கைகளினால் தீவுப்பகுதி மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்து வருகின்றார்கள். (22)

**வாய்த்தகராறு**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராறு முற்றிவிடவே இவர் மேற்படி நிலைக்கு உள்ளாகி தெல்லிப்பளை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார். (ச)

**புலிகளின்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்பால் உள்ள இடத்துக்கு இராணுவத்தினர் வந்தபோது புலிகளால் வழிமறித்துத் தாக்கப்பட்டனர்.

இந்த தாக்குதலினால் நான்கு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே பலியாகினர். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினருக்கு உதவி செய்யப் புறப்பட்ட வாகனமே நிலக்கண்ணியில் சிக்கியது. இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் இழப்புக்களுடன் முகாமுக்குத் திரும்பினர்.

**ஆயுதங்கள் மீட்பு**

இந்தத் தாக்குதலின் போது இராணுவத்தினரிடமிருந்து பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. ரீ-56ரக துப்பாக்கிகள் 2, ரீ-81- 2 ரக துப்பாக்கிகள் 2, ரவைக்கூடுகள் 16, ரவைகள் 990, ஜே. ஆர் கிரனைற்றுகள் 2, தலைக்கவசங்கள் 08, சப்பாத்துக்கள் 4 சோடி, கோல்சர்-4 தண்ணீர்ப்போத்தல் ஒன்று என்பன கைப்பற்றப்பட்ட ஆயுதங்களாகும்.

**சந்தைமீதும்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேலி) தவமணி(வயது 44 திருநெல்வேலி) த. வாசுகி (10 வயது திருநெல்வேலி) இலக்கினேஸ்வரி (வயது55திருநெல்வேலி) லலிதா செல்லையா (வயது 23) ஆகியோருடன் பலர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

ஏற்கனவே திருநெல்வேலி சந்தையின் மீது குண்டுவீச்சு தாக்குதல்நடத்தப் பட்டுப் பலத்த சேதங்கள் ஏற்பட்டிருந்ததால் சந்தை திருத்த வேலைகள் நடக்கவிருந்தன. இந்நிலையில் மீண்டும் குண்டுகள் வீசப்பட்டதால் புதிதாக போடப்பட்டிருந்த அஸ்பெஸ்ரஸ் ஒடுகள் சிதறிப்போய்க் கிடந்தன. ஓலையால் வேயப்பட்ட குடிசையின் கூரைகள் மின்கம்பத்தில் தொங்கின. நேற்று வீசிய குண்டு திருநெல்வேலி சந்தையின் மையத்தில் வீழ்ந்ததால் அச்சந்தை முற்றாக சேதமடைந்துபோய் விட்டது.

**அரியாலையில் பாடசாலை மீது குண்டு வீச்சு**

இன்று பாடசாலைகள் ஆரம்பமாகின்றன என்று கல்விப்பணிப்பாளர் தெரிவித்திருந்த அதேவேளை நேற்று மாலை அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை மீதுகுண்டுகள் வீசப்பட்டன இதனால் அந்தப் பாடசாலையின் ஒரு மண்டபம் பலத்தசேதமடைந்து போய் உள்ளது. பாடசாலையின் அருகேஇருந்த வீடுகளும் சேதமடைந்துள்ளன. (லோ)

# சிறிலங்கா அரசின் குறிக்கோளை முறியடிக்க வேண்டும்

(கொழும்புத்துறை)

''நம் ஈழத் தாயக மண்ணில் கடந்த யூன் மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னர் இராணுவ நடவடிக்கைகளினால் நிர்க்கதியான நிலையில் வீடு வாசல்களை இழந்து சொல்லொணாத் துயரடைந்த நிலையில் இன்று நம் தமிழ் மக்கள் உள்ளனர்.''

இவ்வாறு ஐந்து லட்சம் தமிழ் மக்கள் கையெழுத்துப் பிரதி பெறும் முதலாவது பிரசாரக் கூட்டம் கொழும்புத்துறை மேற்குச் சனசமூக நிலையத்திறந்த வெளியரங்கில் கடந்த புதன்கிழமை மாலை நடைபெற்ற போது தலைமை வகித்துப் பேசிய தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்ற அமைப்புக் குழு உறுப்பினர் திரு. சி. சி. வரதராசா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இது மட்டுமன்றி அரசின் குறிக்கோள் எமது தமிழ் மக்களின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் ஒரே நோக்குடன் செயல்படுவது தான். நினைத்தபடி பரவலாகப் பெரும்பாலான வீடுகள், கடைகள், அரசகட்டிடங்கள், தியேட்டர்கள், ஆலயங்கள், பாடசாலைகள், உதயன் பத்திரிகைப் பணிமனை ஆகியனவற்றை வானத்தாக்குதல் மூலம் தாக்கிப் பொருளாதாரச் சீர்குலைவை ஏற்படுத்தியுள்ளது. எனவே நம் தமிழீழ மக்கள் இவற்றை நன்கு உணர்ந்து நாம் தமிழர், இது எமது தாயகம் என்ற ஓர் உணர்வுடன் ஒன்றுபட்டு அதர்மத்திற்கு எதிராகச் செயல்பட முன்வர வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

## இரு புலிகள் வீர மரணம்

(மாங்குளம்)

சிறிலங்கா இராணுவத்தினரால் மாங்குளம் இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சுதாகர், கெஞ்சன் ஆகிய இரு போராளிகளும் வீர மரணமடைந்தனர். இவர்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள். (மு)

## காலில் சுட்டு இழுத்துச் சென்றனர்

(மட்டக்களப்பு)

சுற்றி வளைத்துத் தேடுதலை மேற்கொண்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பொதுமகன் ஒருவரைச் சுட்டு முகாமிற்குள் இழுத்துச்சென்றனர்.

செங்கலடிப்பகுதி, டச் பார், நாவலடி ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்துத் தேடுதலை மேற்கொண்ட இராணுவத்தினரே ஒருவரின் காலில் துப்பாக்கியால் சுட்டு அவரை இராணுவ முகாமிற்குக் கொண்டுசென்றனர். (மு)

## லொறி மோதி மூதாட்டி காயம்

(சுன்னாகம்)

சுன்னாகப் பகுதியில் 85 வயது மூதாட்டி ஒருவர் வீதியைக் கடக்கமுற்பட்டபோது லொறி ஒன்றினால் மோதப்பட்டு படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பளை அரசினர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவருக்கு தலையிலும் கையிலும் பலத்தகாயம் ஏற்பட்டுள்ளது. இவர் மண்ணிற சேலை அணிந்துள்ளார். இவர் பற்றிய மேலதிக தகவல்கள் பெறமுடியாது உள்ளதனால் உறவினர்களை வந்து தொடர்பு கொள்ளும்படி வைத்திய சாலைப் பிரிவினர் கோருகின்றனர். இவ்விபத்து நேற்று மாலை 5.30 மணியளவில் இடம் பெற்றது. (ச)

**பொதுசன**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப் பகுதிமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்தப் பணத்தைக்கொண்டு இவ்விரு மாதங்களுக்கும் உரியபணத்தை வழங்கமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## இராணுவம் சுட்டு ஒருவர் காயம்

(பலாலி)

நேற்று மதியம் பலாலி இராணுவ முகாமின் கட்டுவன் சென்றிப்பகுதியில் இருந்த இராணுவம் சுட்டதில் குப்பிளானில் உள்ள வீட்டில் நின்ற விநாயகர்- பரஞ்சோதி மூர்த்தி(36) என்பவர் படுகாயமடைந்தார். இவரின் முதுகில் சூடுபட்டுள்ளது. இவர் சிகிச்சைக்காக தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச)

## வைப்பில் இடலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் நாளை முதல் குவைத் தவிர்ந்த ஏனைய சர்வதேச நாட்டு காசோலைகளும், உண்டியல்களும் கணக்கில் வைப்பில் இடுவதற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலும் இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளைக் காசோலைகளும் கணக்கில் வைப்பில் இடுவதற்கு ஏற்றுக் கொள்ளப்படும். வங்கி, வாடிக்கையாளர்களுக்காக காலை 9-00 மணிமுதல் 10-00 மணி வரை திறந்திருக்கும்.

## மயிலிட்டியில் ஹெலிசுட்டு இருவர் காயம்

(மயிலிட்டி)

மயிலிட்டிப்பகுதியில் நேற்று மாலை 5. 30 மணியளவில் ஹெலி ஒன்று சுட்டதில் சங்கரன் யோகராஜா (23), சுந்தரம் ரஞ்சன் (33) ஆகியோரின் காலில் காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக இவர்கள் தெல்லிப்பளை அரசினர் மருத்துவ மனையில் இளைஞர்களால் சேர்க்கப்பட்டு சிகிச்சையின் பின் வீடுசென்றனர். (ச)

**திறந்த**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வ வெளியீடான விடுதலைப் புலிகள் ஆவணி; புரட்டாதி மாத வெளியீட்டில் யாழ். கோட்டையை எவ்வாறு கைப்பற்றினோம் என்னும் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கட்டுரை யாழ். கோட்டையின் அமைப்பில் இருந்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கோட்டை முற்றுகை தாக்குதல், போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

மேலும் இவ் விதழில் திருக்கோணமலை மாவட்டத்தின் இன்றைய நிலை பற்றி திருக்கோணமலை பிராந்திய தளபதி திரு பதுமனின் பேட்டியும் ''போரிடாவிடின் எமக்கு வாழ்வில்லை'' என்ற பிரதித் தலைவர் கோ. மகேந்திரராசாவின் அழைப்பும் இடம் பெற்றிருக்கிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.